__சுருக்கம்__

பொதுப்பணிகள் கருணை அடிப்படையில் பணிநியமனம் – உடல் நலம் இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் அரசுப் பணியிலிருந்து ஒய்வு பெறும் அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

__தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யு.1) துறை__

அரசாணை (நிலை) எண் 10 — நாள் 13.02.2009

திருவள்ளுவர் ஆண்டு 2040

மாசி 1

__படிக்கவும்:__

1. அரசாணை( நிலை) எண் 1025, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 22.11.1976 .
2. அரசாணை (நிலை) எண் 168 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 19.10. 2000.
3. அரசாணை (நிலை) எண் 42 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 12.03.2007.

__ஆணை:__

மேலே 1–இல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மருத்துவ இயலாமை காரணமாக பணி ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் ஆண்/ பெண் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது .

2. மேலே 2–இல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், மருத்துவ இயலாமை காரணமாக பணி ஒய்வு பெறும் அரசு ஊழியர்களின் அதிகபட்ச வயதுவரம்பு 50 லிருந்து 53 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டு அத்தடையானது அரசாணை (நிலை) எண் 16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 21.0.2.2006 ல் விலக்கி கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண் 61, தொழிலாளர் மற்றும் வேல வாய்ப்பு துறை, நாள் 19.07.2006ல் இது குறித்து வழிமுறைகள் தனியாக வெளியிடப்படும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4. உச்சநீதி மன்றத்தீர்ப்பு மற்றும் பணியாளர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அரசாணை (நிலை) எண் 42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12.03.2007–ல் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து சில வழிக்காட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

5. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 12.03.2007 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 42–இல் 22.11.1976 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.1025, ஆய்வு செய்யப்படவில்லை. மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களின் மகன் / மணமாகாத மகள் / நெருங்கிய உறவினர்களுக்கு கருணை அடிப்படையிலான நேரடி பணிநியமன சலுகையினை வேலைவாய்ப்பகங்களில் தொடர்பு கொள்ளாமல் அளிப்பதுபோல், மருத்துவ இயலாமை காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்ற அரசு ஊழியரின் வாரிசுதாரர்களின் மகன்/ மணமாகாத மகள்/ நெருங்கிய உறவினர்களுக்கு குடிமைப் பணி ஒழுங்குமுறைகளின் விதி எண்.452 மற்றும் 454 விதிகளுடன் படிக்கப்பட்ட விதி எண். 441- இன்படி கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கப்பட்ட இச்சலுகையினை மைய அரசு மருத்துவ இயலாமை காரணமாக ஒய்வுபெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கும் விரிவுபடுத்தியது.

6. மருத்துவ இயலாமை காரணமாக பணியிலிருந்து ஒய்வுபெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கமுடியாது என்றும், மரணமடையும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்க முடியும் என்றும், மருத்துவ இயலாமை காரணமாக ஒய்வு பெற்ற அரசு ஊழியர்களின் வாரிசுக்கு பணி நியமனம் வழங்கப்பட்ட ஆணையினை ரத்து செய்து ஆந்திரபிரதேச மாநில உயர் நீதிமன்ற முழு பெஞ்ச் சமீபத்தில் அளித்த ஆணையினை எதிர்த்து சிவமூர்த்தி - எதிர் - ஆந்திரபிரதேச மாநில அரசு மற்றும் பலர் ஆந்திரபிதேச மாநில அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கை தொடர்ந்தனர். நீதிபதிகள் ஆர்.வி. ரவீந்திரன். எஸ்.எஸ் பாண்டா ஆகியோர் அடங்கிய டிவிசன் பெஞ்ச் அளித்துள்ள தீர்ப்பில் மருத்துவ இயலாமை காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் அளிக்கும் ஆணை செல்லும் என உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.

7. மேற்கண்ட சூழ்நிலையில் மருத்துவ இயலாமைகாரணமாக ஒய்வு பெற்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து அரசு கவனமாக பரிசீலித்து இப்பணிநியமனம் ஏற்கனவே அளிக்கப்பட்டவாறு அவர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணிநியமனம் அளிக்கலாம் எனவும் ஏற்கனவே மருத்துவ இயலாமை காரணமாக பணிஒய்வு பெற்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணிநியமனம் அளிக்கப்பட்டுள்ளதை பணிவரன்முறை செய்வதை தொடர்ந்து கடைபிடிக்கலாம் எனவும், ஏற்கனவே அரசாணை (நிலை) எண். 168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 19.10.2000 இன்படி, மருத்துவ இயலாமை காரணமாகப் பணி ஒய்வு பெறும் அதிக பட்ச வயதுவரம்பான 50-லிருந்து 53 ஆக உயர்த்தப்பட்ட ஆணையினை தொடர்ந்து கடைபிடிக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

**8.** அரசாணை (நிலை) எண் 42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007-ல் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் இந்நேர்வுக்கும் பொருந்தும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

**9.** இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 21/ஜி2/09 நாள் 07.01.2009 மற்றும் சட்டத்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 5491/09, நாள் 03.02.2009-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. பிரபாகர ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை -600 009
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம் சென்னை – 600009
அனைத்துறை தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட நீதிபதிகள்
மாவட்ட உரிமையில் நீதிமன்ற நீதிபதிகள்
பதிவாளர் உயர்நீதிமன்றம் சென்னை -104
பதிவாளர் சென்னை உயர்நீதிமன்ற கிளை- மதுரை
அரசு வழக்குரைஞர் சென்னை / மதுரை
முதன்மை மாநிலக் கணக்காயர் சென்னை –600 018
முாநிலக் கணக்காயர் ( தணிக்கை) சென்னை 600 018
செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 600 002.
இயக்குநர் , கருவூலகத்துறை சென்னை 600 035
அனைத்து மாவட்ட கருவூலகத் தலைவர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
முதலமைச்சர் அலுவலகம் சென்னை -600 009.
தொழிலாளர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை 600 009.
<u>நகல்</u>
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை சென்னை –600 009.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, சென்னை -600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.